**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (7.12.2020) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் வடசென்னை பதிவு மாவட்டம் – கும்மிடிப்பூண்டி மற்றும் செங்குன்றம் ஆகிய இடங்களில் 1 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி வணிகவரி கோட்டம், மணப்பாறையில் 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநில வரி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 3.7.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள், நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்களாக கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த வகையில், வடசென்னை பதிவு மாவட்டம் – கும்மிடிப்பூண்டி மற்றும் செங்குன்றம் ஆகிய இடங்களில் தலா 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 1 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், 2018–19ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத் துறை மானியக் கோரிக்கையில், வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு வருகை தரும் வணிகப் பெருமக்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டுவது அரசின் நோக்கமாகும். அதன் அடிப்படையில், மணப்பாறையில் செயல்படும் மாநில வரி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்படி, திருச்சிராப்பள்ளி வணிகவரி கோட்டம், மணப்பாறையில் 84 லட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநில வரி அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

பதிவுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 14 பணியாளர்களின் வாரிசுதாரர்களில் 13 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு நபருக்கு அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 7 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., வணிகவரி ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு.எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**